


# ஆகஸ்ட் 28 - புனித அகுஸ்தீன் (354-430)

இவரது தயார் பெயர் மோனிக்கம்மாள். கார்த்தேஜ் நகரில் கல்வி கற்கும்போது பல தவறுகளைச் செய்தார். இறுதியில் ஒரு மோசனமான மார்க்கத்தில் சேர்ந்தார். அவிசுவாசியான தந்தை இவரைக் கண்டிக்கவில்லை. தந்தை இறந்தபின் இவர் கார்த்தேஜ் நகரில் வாழ்ந்து ஒரு பள்ளிக்கூடத்தைத் தொடங்கினார். பின் இவர் உரோமை நகருக்கும், மிலான் நகருக்கும் சென்று கல்வி கற்பித்து வந்தார். கடவுளின் அருளும், தாயின் கண்ணீரும் மன்றாட்டுகளும் புனித அம்புரோஸ் போன்றவர்களின் போதனைகளும் இவரை மனந்திருப்பியது.

இவர் தனியாக இருக்கையில் "எடுத்து வாசி" என்ற அற்புதக் குரல் கேட்டது. அருகில் கிடந்த புனித சின்னப்பரின் நிருபங்களை எடுத்துப் படித்தார். "பகலில் நடப்பது போல நேர்மையுடன் நடங்கள்" என்னும் புனித சின்னப்பரது சொற்கள் இவரது கண்களில் பட்டன. அந்த வினாடியிலிருந்து இவரது சந்தேகங்கள் அகன்றது. ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள தீர்மானித்து 387-ஆம் ஆண்டு தனது 33-ஆம் வயதில் ஞானஸ்நானம் பெற்றார். 388-ல் கார்த்தேஜ் நகரை அடைந்து, பின் தகாஸ்து நகருக்குப் போய் சில நண்பர்களுடன் துறவற வாழ்வு நடத்தினார். 390-ல் இவர் குருப்பட்டம் பெற்றார். அதன் பின் நண்பர்கள் பலரோடு ஹீப்போ நகருக்குப் புறப்பட்டார். அங்கும் அவர்களோடு துறவற வாழ்வு நடத்தினார். ஐந்து ஆண்டுகளுக்குப்பின் இவர் ஆயர் பட்டம் பெற்று ஹீப்போ நகரின் துணை ஆயரானார். இதிலிருந்து விடாது உழைக்கத் தொடங்கி தம் சபையை ஆண்டு நடத்தினார். மக்களுக்குப் போதித்தார். அரிய பல நூல்கள் எழுதினார். 397-ஆம் ஆண்டில் இவர் தாழ்ச்சியுடன் தனது வாழ்க்கை வரலாற்றை எழுதினார். அக்காலத்தில் பரவியிருந்த பல தப்பறையான கொள்கைகளை இவர் எதிர்த்துப் போராடினார்.

**சிந்தனை:** பாவியாக இருந்து மனந்திரும்பி இவர் மிகுந்த ஆர்வத்துடன் கடவுளின் மகிமைக்காக உழைத்து தம் பழைய வாழ்வுக்கு ஈடு செய்தார். பழைய பாவங்களுக்காக இவ்விதம் பரிகாரம் செய்வது எல்லோராலும் முடியும்.

**செபம்:** ஆண்டவரே, உம்மீது உள்ள அன்பில் நான் பற்றி எரியச் செய்தருளும்.